**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE SESSIONS JUDGE,**
**MAHALIR NEETHIMANDRAM, MADURAI.**

| | |
|---|---|
| Sessions Case | **- S.C No.581/2018** |
| Deposition of witness for | - P.W.14 |
| Name | - Thiru. Chellapandiyan |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **18.10.2024**

**1, 2 எதிரிகள் ஆஜர் 3 முதல் 6 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச படி மனுதாக்கல்செய்யப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி பணிநிறவு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு 04.02.2017ம் தேதி நாகமலைப்புதுக்கோட்டையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றியபோது நான் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சுமார் 17.00 மணியளவில் திருமங்கலம் வட்டம் ஒத்தவீடு, எஸ்பெருமாள்பட்டியைச் சேர்ந்த தங்கப்பாண்டியன் மனைவி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்று நிலையக்குற்ற எண். 89-2017 பிரிவு 174 (3) Cr.P.C, 176, 201 of IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் ஏற்கனவே அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.7 ஆகும்**. இறந்த பெண் திருமணம் ஆகி 7 ஆண்டுகளுக்குள் இருந்ததாலும் புகார் மற்றும் முதல் தகவல்

அறிக்கையை இணைத்து வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். அதன் ஒரு நகலை சமயநல்லூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் அனுப்பி வைத்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தனர். அவர்களின் விசாரணைக்கு நான் உதவியாக இருந்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அசா.1 புகார் எங்கு வைத்து யாரால் எழுதப்பட்டது என்ற விபரத்தை நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். இந்த எழுத்து மூலமான புகாரைநான் பெறுவதற்கு முன்பாக எனக்கு இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். அன்றைய தேதியில் நிலைய பொறுப்பு அதிகார் நான் தான் இருந்தேன். அந்த புகாரில் பிரேதம் எரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் துணைகண்காணிப்பாளர் என்னை விசாரிக்கும் போதுபிரிவு ் பிரேத விசாரணை செய்யும் பொருட்டு “இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கையையும் வாதியின் புகார் மனுவையும் இணைத்து கணம் வருவாய் கோட்டாட்சியர், மதுரை அவர்கள் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.” பிரேத விசாரணை செய்யவேண்டும் என்றால் பிரேதம் இருக்க வேண்டும் என்றால் அது பற்றி நான் கருத்து கூற முடியாது. புகாரில் பிரேதத்தை தூக்கிக்கொண்டு எரித்து விட்டார்கள் என்று இருக்கும் நிலையில் உடனடியாக நான் சுடுகாட்டிற்கு சென்று பிரேதம் முழுமையாக எரிக்கப்பட்டதாக இல்லை பகுதியாக எரிக்கப்பட்டுள்ளதா என்று பார்த்தேனா என்றால் அது என்னுடைய வேலை இல்லை. யார் மூலம் வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பினேன் என்று தற்போது ஞாபகம் இல்லை. அப்போது அங்கு இருந்த காவலர்கள் மூலம் அனுப்பி இருப்போம். புகார் கொடுப்பதற்கு முன்பு வருவாய்

கோட்டாட்சியருக்கு இந்த சம்பவம் பற்றி தெரியுமா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 13.04.2017ம் தேதி தான் நீதித்துறை நடுவரால் பெறப்பட்டது என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியருக்கு முநிகா தனபாண்டி என்பவர் மூலம் அனுப்பப்பட்டது. மேற்படி தனபாண்டி என்பவர் மூலமாக வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பினேன் என்பதற்கான பதிவுகள் வழக்கு கோப்பில் இல்லை. இந்த சம்பவம் நடைபெற்றபோது இறந்த பெண்ணின் தாயார் உடன் இருந்து பிரேதத்தை எரிக்கசெய்து விட்டு உயர் அதிகாரிகள் மற்றும் மீடியா வந்ததால் அவர்களின் தூண்டுதலால் தவறாக புகாரின் பெயரில் எந்த விசாரணையும் செய்யாமல் பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.